★ வாகனங்கள் சேதம்; 8 பொலிஸார் படுகாயம்

# இந்திய அமைச்சர் சிந்தியா வாசஸ்தலம் பி.ஜே.பி. தொண்டர்களால் தாக்கப்பட்டது!

இந்திய சிவில் விமானப்போக்கு வரத்து அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் வாசஸ்தலம் நேற்றுக்காலை பலத்த தாக்குதலுக்குள்ளானது. சுமார் 250 பேர் கொண்ட பாரதிய ஜனதாக்கட்சியைச் சேர்ந்த இளைஞர் அணியொன்று அமைச்சர் சிந்தியாவின் வாசஸ்தலத்தின் வெளிப்பகுதியினுள் புகுந்து கொண்டனர். இவர்கள் அங்கு நின்ற கார்கள் உட்பட பல வாகனங்களை அடித்து நொருக்கினர். அமைச்சரின் வீட்டை நோக்கி கல்வீச்சு நடாத்தினர். அங்கு காவலுக்கு நின்ற பொலிஸார் மீதும் தடியடி நடந்தது. இதனால் அதிகாரி ஒருவர் உட்பட எட்டுப் பொலிஸார் படுகாயமடைந்தனர். பி ஜே. பி தொண்டர்களின் தாக்குதல் அதிகரிக்கவே மேலதிக பொலிசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு, தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தினரை விரட்டியடித்தனர். இதில் பல பாரதிய ஜனதாக்கட்சி தொண்டர்கள் காயமடைந்தனர். நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தை ஆட்சேபித்து நேற்று பாராளுமன்றத்தில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் கலாட்டா புரிந்தனர். பாரதிய ஜனதாத்தலைவர் அத்வானி இது குறித்து மன்னிப்புக்கோர வேண்டும் எனக் கூச்சலிட்டு சபையின் நடுவே நின்று கொண்டனர். இதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் நேற்று மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டன. மீண்டும் நான்கு மணியளவிலேயே சபை கூடியது. மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் இவ்வன்முறை குறித்து மாலை சபையில் விளக்கமளித்தபோது பாரதிய ஜனதாக்கட்சியின் தொண்டர்கள் நால்வருக்கு எதிராக வழக் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு          விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 260 பிரசோற்பத்தி ஆடி 30 ( 15 - 08 - 1991 ) வியாழன்

# யாழ் அரச அதிபர் - ஜனாதிபதி கொழும்பில் நேரடிப் பேச்சு

## பொருளாதாரத் தடை, உலர் உணவு நிறுத்தம் குறித்து அரச அதிபர் விவரிப்பு

கொழும்பு சென்றுள்ள யாழ் அரச அதிபர் க. மாணிக்கவாசகர் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவை அவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்து பேச்சு நடாத்தியுள்ளார். இச்சந்திப்பின் போது அரச அதிபர் யாழ் மாவட்டத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடி குறித்து ஜனாதிபதிக்கு விவரித்துள்ளதாக தெரியவருகிறது.

வடபகுதியில் நிலவும் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்துமாறும் திடீரென இடைநிறுத்தப்பட்ட உலர் உணவு நிவாரணத்தைத் தொடர நடவடிக்கை எடுக்குமாறும் யாழ் அரச அதிபர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

எனினும் இச் சந்திப்பின் முடிவில் ஜனாதிபதி பிரேமதாஸவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகர்- ஜனாதிபதி பிரேமதாஸ சந்திப்புத் தொடர்பாக கொழும்புப் பத்திரிகை புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. 06

### பரீட்சை ஆணையாளர்

## வடபகுதி நிலைமையினால் வினாத்தாள் அனுப்பவில்லை

தற்போது வடபகுதியில் காணப்படும் நிலைமை காரணமாகவே] க. பொ. த. உயர்தரப் (1991)பரீட்சை வினாத்தாள்களை இங்கு அனுப்பிவைக்க முடியாமல் போனதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நேர அட்டவணையின் காலப்பகுதியில் வடபகுதியில் உயர்தரப்பரீட்சையை நடாத்த முடியாது —04ஆம் பக்கம் பார்க்க

### பூநகரியில்சம்பவம்

## விடுதலைப் போராட்டத்தில் மகளைச்சேர்த்த பெற்றோர்

பூநகரியில் தமது மகளை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவென பெற்றோர்கள் விடுதலைப்புலிகளிடம் மனப்பூர்வமாக ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

பூநகரி செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த சந்திரசேகரம் குடும்பத்தினர் தமது மகளான மாலினி (16) என்பவரை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பூநகரி செயலகத்தில் ஒப்படைத்துள்ளனர். 31

## யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களில் சில பகுதிகளில் ஊரடங்கு நீக்கம்

யாழ் மாவட்டத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்குச்சட்டம் உடனடியாக நீக்கப்பட்டுள்ளதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது.

—04ஆம் பக்கம் பார்க்க

## கண்ணிவெடியைப் புதைத்த 3 சிப்பாய்கள் பலி!

அம்பாறையில் கண்ணிவெடியொன்று வெடித்ததில் 3இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இராணுவ பொறியியல் பிரிவைச் சேர்ந்த கண்ணிவெடி வைக்கும் சிப்பாய்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பகுதியில் இவர்கள் கண்ணிவெடியொன்றை புதைத்துக்கொண்டிருக்கையில் அது தவறுதலாக வெடித்ததில் அம் மூவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மாலையில் குப்பை எரிக்க நயினாதீவில் தடை!

நயினாதீவு மக்கள் குப்பை எரிக்கவும் கடற்படையினர் தடைவிதித்துள்ளனர். மாலை நேரங்களில் குப்பை எரித்து நெருப்பு வளர்க்கக்கூடாது என கண்டிப்பான உத்தரவு இடப்பட்டுள்ளதாம்.

அண்மையில் நயினாதீவு கரைப்பகுதியில் மாலையில் குப்பைகூழங்களை எரித்த பொதுமக்களில் சிலர் கடற்படையினரால் நையப்புடைக்கப்பட்டனராம்.

குப்பை எரித்து சமிக்கை வழங்கப்படலாம் எனக்கருதியே படையினர் இந் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக அங்கிருந்துவந்த ஒருவர் தெரிவித்தார். (15)

## மீளக்குடியமர்வு கொடுப்பனவு பெறத்தவறியவருக்கு சந்தர்ப்பம்

1987 இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்தவர்களுக்கான மீளக்குடியமர்தல், சுயதொழில் நிவாரணங்களை வங்கிகளில் எடுக்கத்தவறியவர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பணிகள் தற்போது யாழ் செயலகத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும், இவை பூர்த்தியானதும் மீளக்குடியமர்தல் பணமாக —04ஆம் பக்கம் பார்க்க

## ஆறாம் ஆண்டு மாணவருக்கு தமிழர் வரலாற்று நூல்

ஆறாம் ஆண்டு வகுப்பில் கல்விகற்கும் மாணவர்களுக்கான 'வரலாறு' நூல் ஒன்று மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது. தமிழ் மக்களின் பாரம்பரியங்கள், வரலாறுகள் சரியான முறையில் அமைக்கப்படாது பெரும்பான்மை மக்களின் கலாசாரம், வரலாறுகள் ஆகியன மிகைப்படுத்தப்பட்டு அரசினால் வெளியிடப்பட்ட வரலாற்று நூலுக்குப் பதிலாகவே இந்த வரலாறு நூல் எழுதப்பட்டு வெளியிடப்படவுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கல்விப்பிரிவினர் இதற்கான குழுவொன்றை அமைத்து நூலை உருவாக்கியுள்ளனர். — 04 ஆம் பக்கம் பார்க்க

## சகல கோத்தணிகளிலும் கல்வி வளர்ச்சிக் கழகம்

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கோத்தணிகள்தோறும் "கல்வி வளர்ச்சிக் கழகங்க"ள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக் கழகங்களில் ஒவ்வொரு பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், — 04ஆம் பக்கம் பார்க்க

## ஹெலி வட்டமிட்டது

நேற்று மாலை ஹெலிக்கப்டர் ஒன்று யாழ் நகரப் பகுதி மற்றும் இதர இடங்களிலும் பலமுறை வட்டமிட்டுச் சென்றது. 06

எஸ். திருநாவுக்கரசு என்ற முழுப்பெயர்கொண்ட எஸ். ரி. அரசு அவர்கள் 'அரசய்யா' என அன்போடு கலையுலகில் அழைக்கப்படுபவர். நடிப்பு, ஒப்பனை, அரங்க விதானிப்பு, நெறியாள்கை முதலிய நாடக அரங்கக் கலைகளுடன் தன்னைப் பிடித்தணைத்துக் கொண்ட அரசர்' வில்லிசை, சிற்பத்துறை ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டவர். கலைப் பணிக்காக 'மாமனிதர்' விருது பெற்ற அவரைச் செவ்வி காண்கிறார்கள் குழந்தை சண்லிங்கமும் கந்தையா ஸ்ரீகணேசனும்.

# மாமனிதருடன் ஒரு மணி நேரம்

கேள்வி:- கலையுலகில் தாங்கள் அடியெடுத்து வைத்தது எப்போது?

பதில்:- 1934 இல் நல்லூர் சாதனா பாடசாலையில் செல்லையா ஆசிரியர் பழக்கிய சிறுவர் நாடகத்தில் நடித்தது முதல் அனுபவம். இடையில் இராணுவ சேவையில் இருந்த போது நாடகம் ஒன்றில் பாடகர் குழுவில் இணைந்து கொண்டேன். பின்னர் நல்லூர் காமாட்சியம்பாள் சனசமூக நிலைய நாடகங்களின் மேடையேற்றத்தின்போது திரை இழுப்போனாக இருந்தேன். 1947 இல் சுண்டிக்குளி V.C. பரமானந்தம் அவர்களால் நடிப்புலகில் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டேன். தொடர்ந்து அரியாலையில் உள்ள சனசமூகநிலையங்கள் மேடையேற்றும் நாடகங்களில் நடித்தேன்.

அக்காலத்தில் வரலாற்றுக் கற்பனைநாடகங்களை மேடையேற்றும் வழக்கமே இருந்து வந்தது. ஆனால் தென்னிந்திய அரசியல் நாடகங்களின் செல்வாக்கால் ஈழத்திலும் அதன் பிரதிபலிப்புக் காணப்பட்டது. A. V. P. ஆசைத்தம்பி, நாரண துரைக்கண்ணன், கலைஞர் மு கருணாநிதி. C N. அண்ணாத்துரை ஆகியோரின் அரசியல் சமூக சீர்திருத்த நாடகங்களை நண்பர்களுடன் இணைந்து தயாரித்த போது அவற்றில் நடித்தேன். வடஇலங்கை, நாடகமன்றத் தயாரிப்பான வசன நாடகம் 'பூதத்தம்பி'யில் அந்தனி அமறால் ஆகவும் ''இளங்கோவின் துறவு'' நாடகத்தில் இளங்கோவாகவும் 'யாழிசையும் ஊழ்வினையும்'' நாடகத்தில் கோவலனாகவும் நடித்தேன்.

வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்தை நண்பர்களுடன் இணைந்து உருவாக்கி 'கானல்வரி', வீரமைந்தன், வீரத்தாய், தமிழன்கதை, 'திப்புசுல்தான்' ஆகியவற்றில் நடித்ததோடு நெறியாள்கையையும் கையாண்டேன். பாடசாலை நாடகத் தயாரிப்புகளில் ஈடுபட்ட காலத்தில் சொக்கனின் 'தெய்வப் பாவை' 'கவரிவீசியகாவலன்', 'கூப்பியகரங்கள்', 'ஞானக்கவிஞன்' ஆகியவற்றை யாழ் இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கு பழக்கினேன் சு. வேலுப்பிள்ளையின் எழுத்தில் உருவான 'வீரசிவாஜி', 'ஷைலொக்', 'ஒத்தெல்லோ' என்பனவற்றை மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களைக் கொண்டு தயாரித்தேன்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் நடிப்பு, நாடகம் தயாரிக்கும் முறைமை என்னைக் கவர்ந்தன. அவரது நெறியான்கையில் உருவான பி, எஸ். ராமையாவின் தேரோட்டி மகனில் 'அருச்சுனன்'. 'சார்த்தகேசி' ஆகிய பாத்திரங்களை ஏற்று நடிக்கும் வாய்ப்புக் கிட்டியது. மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத் தயாரிப்பில் குழந்தை ம. சண்முகலிங்கன் எழுதிய 'வையத்துள் தெய்வம்' இயக்கும் சந்தர்ப்பமும் வாய்த்தது V. M. குகராஜாவினால் மேடைக்கென சுருக்கப்பட்ட சொக்கனின் 'நல்லைநகர்நாவலர்' எனும் திரைப்படப்பிரதியை இயக்கும் பொறுப்பும் நாவலர் மாநாட்டின் போது கிடைத்தது.

மாதனைக் கலா மன்றத் தயாரிப்புகளான 'மயானகாண்டம்', 'சத்தியவான்சாவித்திரி' ஆகிய இசை நாடகங்களிலும் வேல் ஆனந்தனின் 'சீதா பரிணயம்' நாட்டிய நாடகத்திலும் பங்களிப்பு செய்திருக்கின்றேன்.

கே: சிறந்த நாடக நெறியாளராக அறியப்படும் தாங்கள் அத்துறை சார்ந்த நடிப்பு, பேசும் முறைமை, ஒப்பனை, அரங்க விதானிப்பு, வேட உடுப்பு விதானிப்பு ஆகியவற்றில் தனித் திறமையுடையவராக மிளிர்கின்றீர்கள். இந்த வகையில் தாங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நாடகங்கள்...

ப: வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத் தயாரிப்புக்களில் 'வீரமைந்தன்', 'திப்புசுல்தான்' ஆகியவை குறிப்பிடக் கூடியவை வீரமைந்தன் ஒரு கற்பனை வரலாற்று நாடகம். இதன் வெற்றியைத் தொடர்ந்து 'திப்பு சுல்தான்' தயாரிக்கப்பட்டது 'திப்புசுல்தான்' ஒரு வரலாற்று நாடகம். ஆகவே அதனது வரலாற்றுப் பின்னணியைக் கதையமைப்பு, பாத்திரப் படைப்பு, வேட உடுப்பு விதானிப்பு, அரங்க விதானிப்பு என்பனவற்றுக்காக ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட ஒரு நாடகம். இந்த வரலாற்றுக் கண்ணோட்டம் அந்நாடகத்துக்குப் பல வெற்றிகளைத் தந்ததுடன், வரலாற்றுக்கல்வி புகட்டும் ஒரு சிறந்த வரலாற்று நாடகமாகக் கல்வியியலாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுப் பல பாடசாலைகளில் மேடையிடப்பட்டது.

கே: நாடகத்தை ஒரு கல்வி புகட்டும் சாதனமாகவும் பயன்படுத்தப்படுகிற அதேவேளை அது ஒரு மகிழ்வளிக்கைக் கலையாகவும் ஆடப்படுகிறது, அப்படிப்பட்ட ஒரு கலையை எந்த மாதிரியும் தயாரிக்கலாம், யாரும் நடிக்கலாம் என்கின்ற ஒரு மனோபாவம் நம்மவர் மத்தியில் காணப்படுகிறது. உதாரணமாக நாடகத்தில் என்ன படிக்கக் கிடக்கிறது என்றும் சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்.

ப: ஆம் பல்கலைக்கழக மட்டத்தில் 'நாடகமும் அரங்கியலும்' ஒரு பாடமாக, ஆராய்ச்சித் துறையாக மலர்ந்துள்ள இக்காலத்திலும் இக்கேள்வி படித்தவர் மட்டத்தில் கூடக் காணப்படுவது அவர்கள் அறியாமையைக் காட்டுகிறது நாங்கள் ஒரு வரன்முறையான கல்வி அமைப்பூடு நாடகத்தைப் பயின்று நாடகம் போடவில்லைத்தான் எனினும் முறைசாராக் கல்வி முறையில் அத்துறையின் ஒவ்வொரு அம்சத்தையும் அணுகி ஆராய்ந்துதான் நாடகங்களைத் தயாரித்தோம்

4 ஆம் பக்கம் பார்க்க

# கல்வியியல் டிப்ளோமா பயிற்சிக்கு

# 1500 தமிழ் ஆசிரியர் தெரிவு!

கல்வியியல் டிப்ளோமா பயிற்சி நெறியை இவ்வருடம் தொடர்வதற்கு 1500 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்கள் நாடு முழுவதிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர மேலும் 8500 சிங்களம், ஆங்கிலம் மொழி மூலமான ஆசிரியர்களும் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## துருக்கியில் கைவிடப்பட்ட 9 தமிழர்களின் விவரம் அறிவிப்பு

துருக்கியின் மார்மரின் துறைமுகப்பகுதியில் கடந்த மாதம் கப்பல் மூலம் கைவிடப்பட்ட 54 இலங்கையரில் தமிழர்கள் 13 பேர் அடங்குவதாக துருக்கி அரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இவர்களில் ஒன்பது தமிழர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது.

மாணிக்கம் வன்னியசிங்கம் சண்டிலிப்பாய், நவரட்ணம் ரதிபாலகரன் மல்லாகம், மகேஸ்வரி பெர்ணாண்டோ கொழும்பு, நேசமலர் இந்திரகுமார் கனகராயன்குளம், மருதப்பு கமலதாசன் இராமநாதபுரம், கணபதி ராஜன் துரைவரணி, மைக்கேல் சூசை டொமினிக் உப்புவெளி, இலட்சுமணன் இரவீந்திரகுமார் கைதடி கிழக்கு, குமாரசாமி சுவிந்தரராஜ தந்திரன் பெருமாள் கோவில் மேற்கு ஆகியோரே இந்த ஒன்பது பேருமாகும். (08)

## இன்று திறப்பு விழா

யாழ் மாவட்ட திரிசாரணர் குழுவின் தலைமைச் செயலகம் இன்று 15 ஆம் திகதி காலை 8. 15 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## மயிலேறி வருவோனே!

இராகம்;சண்முகப்ரியா தாளம்: ஆதி

பல்லவி

நல்லைத் திருநகரில் நலமாகக் கோயில் கொண்டு
வல்லவினை தீர்த்தருளும் வள்ளலே முருகவேளே
-நல்லைத்திரு

அனுபல்லவி

எல்லைதா னில்லாத எழிலருட் கோலமுடன்
வள்ளிதெய்வ யானை வெற்றிதரு வேலுடனே
-நல்லைத்திரு

சரணம்

எண்ணரு மடியார்கள் ஏத்திடு மருட்கடலே
வண்ணமிகு மயிலேறி வீதிவலம் வருவோனே
உன்னடியா ரிடர்களைய இன்னுமேன் தாமதமோ
சண்முகனே சரவணனே சஞ்சலங்கள் தீராயோ
-நல்லைத்திரு

-அ. நமசிவாயம்

★ இன்று நல்லூர்க்கந்தசுவாமிகோவில் கொடியேற்றம்

# யுத்தநிறுத்தத்திற்குப் புதிய முயற்சி

வடக்கு கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான புதிய முயற்சியொன்று கொழும்பில் எடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு நாட்டு அதிகாரிகள் சிலர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகையொன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

## சிறுபோகம் பாதிப்பு

பூநகரி கரியாலை நாகபடுவான் குளத்தில் இருந்து இடதுகரை வலதுகரை துரிசினால் நீர்பாயமுடியாத காரணத்தினால் இதன் மூலம் மேற்கோள்ளப்பட்டு வந்த சிறுபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

குளத்தில் நீர் குறைந்தமையால் இடதுகரை துருசு, வலதுகரை துருசு மூலம் நீர் வருவது தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக விளையும் பருவத்தில் இருந்த பல ஏக்கர் பயிர்கள் கருகி நாசமாகியுள்ளன. (31)

## கோட்டகலை கல்விக் கல்லூரியில் சாதாரண சித்தி பெற்றவருக்கும் பயிற்சி

கொட்டகலை பத்தனையில் அமைந்துள்ள ஸ்ரீ பாதா கல்விக் கல்லூரியில் க பொ.த. சாதாரண தரம் சித்தி பெற்றவர்களும் பயிற்சி மாணவர்களாக சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

இலங்கை யடங்கிலும் தற்போது ஆறு கல்விக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன மலையகத்தில் குறிப்பாக தமிழர்களுக்கென ஜெர்மன் அரசின் உதவியுடன் கொட்டகலை பத்தனை கிரேகிலி தோட்டத்தில் மிகவும் நவீன வசதியுடன் இக்கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. (08)

## சந்நிதி உற்சவம்

10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குச் செல்வச் சந்நிதி ஆலய உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது 18ஆம் திகதி பூங்காவனமும், 23ஆம் திகதி சப்பறமும், 24 ஆம் திகதி தேர் உற்சவமும், 25 ஆம் திகதி தீர்த்தமும் இடம்பெறும். (09)


## சிறு விளம்பரம்

### தேவை

சவுக்கு விதை தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். 08085

### SALE

Rare Selections of English Books in all Fields off the Shelves of family libraries on 15th to 17th August1991. Suitable for educational Institutions/ Family library/ lecturers. Eric Ganesh (opticians) 566, Hospital Road, Jaffna. 08079

உ

கொக்குவில் மேற்கு

மஞ்சவனப்பதி முருகன் ஆலய

## மகோற்சவ விஞ்ஞாபனம்

நிகழ்ச்சி நிரல்

16. 08. 91 வெள்ளிக்கிழமை பகல் 12. 15 மணி
கொடியேற்றம்

22. 08. 91 வியாழக்கிழமை காலை 8. 15 மணி
சப்பற வெள்ளோட்டம்
அன்று பிற்பகல் 2.00மணி
தண்டாயுதபாணி உற்சவம்

23. 08. 91 வெள்ளிக்கிழமை மாலை 5. 30 மணி
சப்பறம்

24. 08. 91சனிக்கிழமை காலை 9. 30 மணி
இரதோற்சவம்
(அன்று காலை 6. 15 மணிக்கு அபிஷேகம், காலை7. 30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை)

25. 08. 91 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி
தீர்த்தோற்சவம்

26. 08. 91 திங்கட்கிழமை
பூங்காவன உற்சவம்
(அன்று பகல் 12. 00மணிக்கு அபிஷேகம், மாலை 2.30மணிக்கு பூஞ்சோலையில் அம்மன் கொலுவிருத்தல், மாலை 4.00மணிக்கு திருக்கல்யாணம்)

27. 08. 91 செவ்வாய்க்கிழமை மாலை 4.00மணி
அலங்கார உற்சவ அபிஷேகம்

இவ்வுற்சவ நாட்களில் அடியார்கள் யாவரும் முருகப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா சபையினர்
08084

# இராணுவத் தலைமையில் விரைவில் மாற்றம்!

## புதிய தளபதியாக கொப்பேகடுவ நியமனமாகலாம்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தலைமைப் பதவிகளில் விரைவில் முக்கிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இதற்கேற்ப தற்பொழுது இராணுவத் தளபதியாகவுள்ள லெப் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கு கூட்டுப்படை தலைமையகத்தில் சிரேஷ்ட பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது. இதற்காக இம் மாதம் 17ஆம் திகதியுடன் முடிவடைந்த இவரது பதவிக் காலம் அரசினால் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

புதிய இராணுவத் தளபதியாக தற்பொழுது வட பகுதிக்கு பொறுப்பாக இருக்கும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அல்லது கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பாக உள்ள மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ன நியமிக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது.

### விதைப்புக் கூட்டம்

பெரும் போகத்திற்கான விதை, உரம், விதைப்புத் திகதி நிர்ணயித்தல், விநியோகம் சம்பந்தமான விசேட கூட்டம் இன்று 15ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உணவு உற்பத்திக் கிளையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது. (04)

### இடம்பெயர்ந்தோர் ஒன்று கூடல்

காரைநகர் இடம்பெயர்ந்தோர் ஒன்று கூடல் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டம் மேல்மாடியில் இடம்பெறும்.

காரைநகர் இடம்பெயர்ந்தோர் இதில் பங்குபற்றித் தங்கள் உறவினர் நலன்பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### முகாமைத்துவ வதிவிடப் பயிற்சி

கொத்தணி அதிபர்களுக்கான வதிவிட முகாமைத்துவப் பயிற்சிநெறி இம்மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து 31 ஆம் திகதி வரை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

புதிதாக இலங்கைக் கல்வி நிர்வாகச் சேவையில் அமர்த்தப்பட்ட, இதுவரை முகாமைத்துவப் பயிற்சி எதுவும் பெறாத கல்வி நிர்வாகச் சேவை 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களும் இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளலாம் என முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (02)

### சுந்தரர் குருபூசை

சரசாலை இலந்தைத்தில வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை கொண்டாடப்படவுள்ளது.

ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையினரால் நடாத்தப்படும் இந்த வைபவத்தில் சுவாமிகள் திரு உருவிற்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

சுவாமிகளின் அற்புதங்கள் குறித்த சிறப்புச் சொற்பொழிவு சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும்.

### உதவி நிறுத்தம்

யாழ் கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவில் இவ் வருடம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள பயிற்சி வகுப்புக்களுக்கு ஐ நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் உதவிகளை நிறுத்தியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இப்பிரிவின் பயிற்சி நெறிகளால் இதுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோர் தொழில்கல்வியை கற்றுள்ளனர்.

இவ்வுதவி நிறுத்தத்தால் மேலும் தொழிற்கல்வியின் புதிய வகுப்புக்களை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது 02

### திட்டமிடல் பணிப்பாளர் போட்டிப் பரீட்சை கொழும்பில்

திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களையும், திட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் திட்டமிடல் உதவிப் பணிப் பாளராக்குவதற்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கிறது.

இப்போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வடபகுதி விண்ணப்பதாரிகளுக்கு வந்துசேரவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 30 விண்ணப்பதாரிகளும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலிருந்து சுமார் 20 விண்ணப்பதாரிகளும் இப்போட்டிப் பரீட்சையிற் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ளனர். (25)

### ஒருலட்ச ரூபா

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி புலமைப்பரிசில் நிதிக்கு கொழும்பு மாநகர சபைத் துணைமேயரும்' ஹாட்லி பழைய மாணவருமான சே கணேசலிங்கம் ஒரு லட்ச ரூபாவை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### பஸ் டிப்போக்களின்தொகை 55 ஆகக் குறைக்கப்படும்

நாட்டிலுள்ள இ. போ. ச டிப்போக்களின் தொகையைக் குறைப்பதற்கு போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி தற்போதுள்ள 104 டிப்போக்களை 55 ஆகக் குறைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு டிப்போவை மற்றொரு டிப்போவுடன் இணைப்பதன் மூலம் இந்தக் குறைப்பு மேற்கொள்ளப்படும் 08)

### படிவத்தைப் புகைப்படப்பிரதி எடுத்த தமிழ் வியாபாரி காவலில்!

மேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பாளர்களும், தற்காலிக வசிப்பாளர்களும் தங்களைப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யும் முகமாகப் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட படிவத்தைப் புகைப்படப் பிரதி எடுத்ததாக வெள்ளவத்தையைச் சேர்ந்த புத்தகக்கடை உரிமையாளரான டி. எஸ். இராமச்சந்திரன் என்பவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் பயன்படுத்திய புகைப்படப் பிரதி இயந்திரம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றத்தில் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (08)

### இயங்கவைக்க முடியாநிலை

முல்லைத்தீவில் உள்ள இலங்கை வங்கியை வவுனியாவில் இயங்க வைக்க எடுக்கப்பட்ட முயற்சி முல்லைத்தீவு வங்கியிலுள்ள ஆவணங்களை எடுப்பதில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ்காரரில் பரீட்சை; ஊலர் தப்ப அது உதவியது

மருத்துவத்துறையில் இதுவரை காலமும் கண்டு பிடிக்கப்பட்ட மருந்து வகைகளில் மிகவும் அற்புதமான மருந்து என்று மருத்துவ நிபுணர்களினால் வர்ணிக்கப்படும் பென்சிலின் மருந்தின் பொன்விழா ஆண்டு இந்த ஆண்டு.

1928 ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் பிளமிங் என்பவர் தமது ஆராய்ச்சியின் பயனாகப் பென்சிலின் மருந்தைக் கண்டு பிடித்தார்.

பென்சிலின் மருந்தின் மகிமையை ஓரளவு அறிந்திருந்த சாள்ஸ் பிளக்சர் என்ற மருத்துவ மேதை, மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஆர்பட் அலக்சாண்டர் என்ற பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு 1941 ஆம் ஆண்டு மாசித் திங்கள் 12 ஆம் நாள் ஊசி மூலம் ஏற்றி பென்சிலின் மருந்தின் மகிமையை உலகறியச் செய்தார். (16)

### ஆங்கில அகராதி பதிப்பு-II விலை 90 ஆயிரம் ரூபா 'மட்டுமே'

கடந்த ஆறு ஆண்டுகளாக அரும்பாடுபட்டு உருவாக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் இரண்டாம் பதிப்பு தற்போது இங்கிலாந்தில் வெளிவந்துள்ளது.

இதில் 24 லட்சம் பொன்மொழிகள் உள்ளன அதில் 30 ஆயிரம் பொன்மொழிகள் ஷேக்ஸ்பியரினது. மேலும் இந்த அகராதியில் 6 கோடி வார்த்தைகள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளன.

22பாகங்களாக பிரசுரிக்கப்பட்ட இந்த அகராதியில் ஒரு பாகத்திற்கு ஆயிரம் பக்கங்களாக 22 ஆயிரம் பக்கங்கள் உள்ளன.

இந்த அகராதியின் விலை, இலங்கை நாணயம் பெறுமதிப்படி 88 ஆயிரத்து 200ரூபாய் என்று தெரிவிக்கப்படுகிறது

இன்னும் இந்த அகராதி கம்யூட்டர் நடாக்களாகவும் விற்பனைக்கு வந்துள்ளது (16)

### மரணக்கொடை

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அங்கத்துவம் பெற்று பின்னர் மரணமடைந்த உரும்பிராயைச் சேர்ந்த பொன்னையா தியாகராசா என்ற விவசாயிக்கு மரணப் பணிக் கொடையாக 11.877 ரூபா 92 சதத்தை வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கமத்தொழில் காப்புறுதிச் சபை யாழ் மாவட்டப் பணிப்பாளர் சி.சிறீஸ்கந்தராசா தெரிவித்தார். (04)

### புதிய பரிசூதிய சேமிப்புத்திட்டம் யாழ் மாவட்டத்தில் அறிமுகம்

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு சங்க சமாசம் சங்கத்திற்காக அரும்பாடுபட்ட பரிசூதிய சேமிப்புத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது

இத்திட்டத்தில் சங்கங்கள் ஊடாகச் சேர்ந்து மாதாந்தம் 10 ரூபா வீதம் 60 மாதங்கள் செலுத்தி 5 ஆவது வருட முடிவில் அவர்கள் செலுத்திய 600 ரூபாவும் வட்டி 150 ரூபாவும் உட்பட 750 ரூபாவை பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் அதிர்ஷ்டசாலிகளாக 1 ஆம் வருடம் மாதம் ஒருவர் வீதம்9பேரும், 2 ஆம் வருடம் மாதம் ஐவர் வீதம் 60 பேரும், 3 ஆம்4ஆம் 5 ஆம் வருடங்கள் மாதம் 10 அதிர்ஷ்டசாலிகள் வீதம் 350 பேரும் தெரிந்தெடுக்கப்பட்டு அதிர்ஷ்டத்திற்குரியபணமாக 600 ரூபாவை உடனடியாகபெற்றுக்கொள்ளத்தகுதியுடையவர்களாக்கப் படுவர்.

### முறைசாராக் கூட்டங்கள்

முறைசாராக்கல்வி பத்திரிகையில் பயின்ற மாணவருக்கானகூட்டம் 16 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் முறைசாராக்கல்வித் திட்ட தொழிற்திறன் பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான அவசர கூட்டம் 16 ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

### நிவாரணம்

தீவுப் பகுதிகளிலிருந்தும் ஆனையிறவு இராணுவமுகாம் தாக்குதல் ஆரம்பித்ததையடுத்தும் தட்டுவன்கொட்டி போன்ற பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்து பூநகரி பகுதிகளில் தங்கியிருக்கும் 370 குடும்பங்களுக்கு பூநகரி அபிவிருத்தி புனர் வாழ்வுக்கழகம் இலவச உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது (31)

### போதையில் மாணவர்.....

மது, போதைப் பொருள் ஆகியவற்றை அருந்தியதால் ஒரே இரவில் 19 பாடசாலை மாணவிகள் கொல்லப்பட்டனர், 71 மாணவிகள் கெடுக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நைரோபி கலவல் பாடசாலை விடுதியொன்றில் நடந்துள்ளது.

இவ்வாறு போதையில் அட்டகாசம் புரிந்தவர்களும் இதே பாடசாலையின் சக மாணவர்கள் தான்.

மாணவர், ஆட்சேபனை ஊர்வலத்தில்கலந்து கொள்ள மறுத்த மாணவியர்களின் படுக்கும் அறைகளே இந்த சக மாணவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன.

அரசினால் நடாத்தப்பட்டு வரும் இப்பாடசாலையில் 14- 18 வயதுக்குட்பட்ட 271 மாணவிகளும், 306 மாணவர்களும் உள்ளனர்.

### இன்று அல்ல நாளை

இன்று 15 ஆம் திகதி வியாழன் காலை 10 மணிக்கு பாலம் பணிமனையில் நடைபெறவிருந்த போராளிகள் பராமரிப்பில் ஈடுபட்ட, ஈடுபடவிருக்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகளினுடனான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் வெள்ளி காலை 10 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சி.இ.கூ. சங்கங்களுக்கு உதவு தொகை

யாழ் மாவட்டத்திலுள்ள சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களில் விவசாய உதவித் திட்டத்தில் பங்குபற்றியவர்க்கு மேற்படி சங்கங்களின் சமாசத்தால் உதவு தொகை வழங்கப்படவுள்ளது.

இவ்வருடம் சிறுநிலை விவசாயத் திட்டத்தின் கீழ் விவசாயக் கடன் பெற்ற அங்கத்தவர் ஒருவருக்கு 20 ரூபா வீதம் சங்கங்களுக்குப் பணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## முன் இருக்கையில் இருந்து பயணம்செய்வோர் இருக்கைப்பட்டி அணிதல் கட்டாயமாகிறது!

வாகனத்தின் முன் இருக்கைகளில் இருந்து பயணம் செய்வோர் இருக்கைப் பட்டிகளை அணிதல் கட்டாயமாக்கப்படவுள்ளது.

அடுத்த வருடம்ஜனவரிமாதம் முதல் இந்த நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டு[illegible].

இதன்படி வாகனத்தின் முன் ஆசனங்களில் அம[illegible] பயணம் செய்[illegible] வாக[illegible]ன் [illegible] இணைக்கப்பட்டுள்ள இருக்கைப் பட்டிகளை அணிந்து கொள்ளத் தவறினால் அவர்கள் போக்குவரத்து விதிகளை மீறிய தாகக்குற்றம் சாட்டப்பட்டு அபராதம் விதிக்கப்படும்.

இருப்புப் பட்டிகள் இல்லாத வாகனங்களில் ஜனவரிமாதத்திற்கிடையில் அவை பொருத்தப்படல் வேண்டும் எனவ[illegible]

★ இளவாலையில் போர்க்காலக் கருத்தரங்கில் பரா

# எமது மண்ணை பறித்தெடுக்கவே சிங்களத் தாய் தனது மகனை அனுப்புகிறாள்!

இன்று சிங்கள மக்கள் மத்தியில் இனத்துவேசம் சிங்கள அரசியல் வாதிகளால் வளர்க்கப்படுகின்றது. இன்றும் கொழும்புப் பத்திரிகைகள் அனைத்துச் சிங்களக்கட்சிகள் ஒரே கருத்தில் சிங்கள இனவாதத்தை வளர்க்கின்றன. இந்த அடிப்படையில் தான் சிங்கள இளைஞர்களை தமிழருக்குஎதிராகப்போராட இராணுவத்தில் சேருங்கள் என்று அறைகூவல் விடுக்கின்றனர். அண்மையில் சிங்களப் பெண் ஒருவர் தனது 3-வது மகனையும் இராணுவத்தில் கொண்டுசென்று சேர்த்ததை கொழும்புப் பத்திரிகைகள் முதல் பக்கச் செய்தியாகப் பிரசுரித்திருந்தன.

இவ்வாறு நேற்றுமுன்தினம் இளவாலையில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர்:

இதைத் தமிழீழத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்திக்கவேண்டும். எங்களுடைய பிரதேசத்தை ஆக்கிரமித்து இந்த நாட்டை ஒரு சிங்கள நாடாக்க அரசு இன்று துடியாய்த் துடிக்கின்றது. இதை நாங்கள் தடுத்து நிறுத்தி எமது பிரதேசத்தை மீட்க வேண்டுமாக இருந்தால் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் போராட வேண்டும். எமது மண்ணைப் பறிக்க ஒரு சிங்களத் தாய் தன் மகனை இராணுவத்தில் சேர்ப்பது என்றால் ஆண்டாண்டுகாலம் சிங்கள ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் எமது பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை இப் போராட்டத்தில் கொண்டுவந்து இணைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

ஆனையிறவில் நடைபெற்ற யுத்தம் ஸ்ரீலங்காவிற்கு மட்டுமல்ல சர்வ உலகங்களும் பெரும்ஆச்சரியத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது சிங்கள அரசானது தனது முழுபலத்தையும் பயன்படுத்தி சில மைல்தூரம் உள்ள ஆனையிறவு முகாமைக் கைப்பற்ற 24 நாள்கள் எடுத்தது. பல இராணுவம் கொலைப்பட்டு பலர் காயமடைந்த நிலையில் தான் இராணுவத்தால் வர முடிந்தது. இந்த 24 நாள்களுக்குள் 3 முறை அரசு தனது படையணிகளை மாற்றியது. ஆனால் எமது போராளிகள் இன்றுவரையும் ஒரே ஆட்கள் நிலையாக நின்று போராடினார்கள். 24 நாள்கள் குளிக்காது உடைமாற்றாது களத்தில் நின்று போராடிய வரலாற்றை நாம் அறியவில்லை. ஆனால் எமது மண்ணில் இந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன. எமது வேங்கைகளின் இலட்சியத்தையும் நாங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து இப்போராளிகளோடு இணைந்து களத்தில் போராட வேண்டும்.

இன்று சிங்களத் தலைவர் பிரேமதாஸவில் இருந்து இராணுவக் தளபதிகள்வரை இந்த ஆனையிறவுச் சண்டை பற்றிக் கருத்துக் கூறியுள்ளனர். இச் சண்டையில் யாருக்கும் வெற்றிதோல்வி இல்லை என்று பிரேமதாஸ கூறுகிறார். இராணுவத் தளபதிகள் இப்போரில் தங்கள் இழப்புக்களை ஒப்புக்கொள்கின்றனர் இருப்பினும் இனியும் இராணுவ நடவடிக்கை மூலம் இப் போராட்டத்தைத் தோற்கடிக்கலாம் என்று பகல் கனவு காண்கின்றனர்.

ஓர் ஒடுக்கப்பட்ட இனம் தனது விடிவிற்காக விடுதலைக்காக கிளர்ந்து எழும்பின் அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை எமது தமிழீழப் போராட்டம் உலகுக்கு எடுத்துக்காட்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## காஷ்மீர் பகுதியெங்கும் இந்தியப்படைகள் உஷார்!

நேற்று பாகிஸ்தான் சுதந்திர தினத்தை முன்னிட்டு காஷ்மீரில் இந்திய இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டனர்.

பாகிஸ்தான் தேசியக் கொடியை காஷ்மீர் எங்கும் பறக்கவிடுமாறு அணிவகுப்புகளை மேற்கொள்ளுமாறும் காஷ்மீர் போராளிக் குழுக்களில் ஒன்று அழைப்பு விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தியப்படையினர் உஷார்ப் படுத்தப்பட்டனர்.

எனினும் காஷ்மீரில் நேற்று பெரியளவிலான வன்முறை ஏதும் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வரதராஜர் மகோற்சவம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 18

## இந்தியத் தீவிரவாதிகளுக்கு வெங்கட்ராமன் அழைப்பு

காஷ்மீர், பஞ்சாப், அஸாம் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த இந்திய அரசு தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

இன்றைய இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றிரவுஇந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் வானொலி, தொலைக்காட்சியில் உரையாற்றினார்:

ஜனாதிபதி தனது பேச்சின் போதே இந்திய தீவிரவாதிகளுக்கு பேச்சுவார்த்தைக்கான அழைப்பை விடுத்தார்.

## சட்டவிரோத தொழிற்சாலை பலாங்கொடவில் கண்டுபிடிப்பு!

தென்னிலங்கையில் சட்டவிரோத சிகரட் உற்பத்தி நிலையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிலோன் டுபாக்கோ கூட்டுத்தாபனத்தில் உற்பத்தியாகும் சிகரட்டுகளைப் போன்று இங்கும் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு விடப்பட்டிருந்தமை தற்போது அறியப்பட்டுள்ளது.

பலாங்கொடவில் இச்சட்டவிரோத சிகரட் உற்பத்தி நிலையம் இயங்கிவந்துள்ளது. இதை நேற்று முன்தினம் கலால் அதிகாரிகள் முற்றுகையிட்டபோது அங்கு நான்கு லட்சம் ரூபா பெறுமதியான சிகரட்டுகள் தயாரித்து வைக்கப்பட்டிருந்ததாம்.

இச்சட்டவிரோத சிகரட் தொழிற்சாலையினால் அரசுக்கு இதுவரை பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## படகுச் சேவை

தீவுப்பகுதிக்கான படகுச் சேவை ஒழுங்காக நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

நயினாதீவு அனலைதீவு எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களிலிருந்து நேற்றைய தினம் படகுச் சேவை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 15

## தாய். பிக்குகள் கொலை இலங்கை மஹாசங்கம் கவலை

அமெரிக்காவில் தாய்லாந்து பௌத்த பிக்குகள் படுகொலை செய்யப்பட்டது குறித்து ஜனாதிபதி பிரேமதாஸவும், பௌத்த மஹாசங்கமும் ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க அரிசோனாமாநிலத்தில் விகாரையிலிருந்த பிக்குனி உட்பட 6 தாய்லாந்து பிக்குகள் இனந்தெரியாதவர்களினால் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே.

ஜனாதிபதியினதும், மஹாசங்கத்தினரினதும், அனுதாபச் செய்திகள் பாங்கொக்கிலுள்ள தூதுவருடாக தாய்லாந்து மஹாசங்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## சுன்னாகத்தில் கொடுப்பனவு

யாழ் மாவட்டத்தில் பணப் புழக்கம் குறைந்துள்ள இவ்வேளையில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி நேற்று தனது வாடிக்கையாளர்களுக்கு பணக் கொடுப்பனவுகளை மேற்கொண்டது. 27

## வீரமரணம்

நேற்று கட்டைக்காட்டில் நடைபெற்ற நேரடி மோதலில் வின்சன் (முத்துராசா சுரேஸ்குமார் புல்மோட்டை) வீரமரணமடைந்தனர்.

## மார்க்கோசின்'சடலம் பிலிப்பைன்ஸ் வரும்?

பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் உடலை பிலிப்பைன்சிற்கு கொண்டுவந்து இறுதிச்சடங்குகளை செய்வதற்கு அவரது மனைவிக்கு அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி அக்கியுனோவின் ஆட்சிக் காலம் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துடன் முடிவடைய இருப்பதால் தாம் முன்னர் விதித்திருந்த தடை உத்தரவை விலக்கிக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதாக அவரின் செயலாளர் பிராங்கிலின் றிவான் தெரிவித்துள்ளார். (03)

### இந்திய...

குத் தொடரப்பட்டுள்ளது என்றார்.

தாக்குதலில் தப்பிய அமைச்சர் மாதவராவ் சிந்தியா, பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பாரதிய ஜனதா தேசவிரோதிகள் எனக்குறிப்பிட்டிருந்ததும், இதுகுறித்து பி.ஜே பி பெரும் சர்ச்சையை சபையில் ஏற்படுத்தி வந்தமையும் இங்கு குறிப்பித்தக்கது.

### சகல...

செயலாளர், பொருளாளர்கள் அங்கம் வகிக்கவுள்ளனர்.

கொத்தணி மட்டத்தில் அமைக்கப்படும் இக் கழகங்கள் கோட்ட மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் படிப்படியாக ஒன்றியங்களாக அமைக்கப்படும்

இக் கழகங்கள் பாடசாலைகளினது சகலவிதமான வளர்ச்சிக்கும் தொண்டாற்றும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## பாலம் சந்திப்பு

போராளிகளைப் பராமரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை மாலை 4 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள பாலம் பணிமனையில்நடைபெறவுள்ளது. இதில் போராளிகளை பராமரிக்கும் அனைத்து ஸ்தாபனங்களின் பிரதி நிதிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

## பிக்குகள் கொலை; தாய்லாந்தில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவிலுள்ள விகாரையொன்றில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட பிக்குகளில் அறுவர் தாய்லாந்தைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களது படுகொலை தாய்லாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இப் படுகொலைகளைக் கண்டித்து தாய்லாந்துப் பௌத்தர்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்திவருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இக் கொலைகள் குறித்து உடனடி விசாரணையை மேற்கொள்ளுமாறு தாய்லாந்து அரசு அமெரிக்காவைக் கோரியுள்ளது.

அமெரிக்காவிலுள்ள பௌத்த விகாரை ஒன்றினுள் 8 பிக்குகள் கொல்லப்பட்டு, அங்கிருந்த பெறுமதிமிக்க தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டமை முரசொலி வாசகர்கள் அறிந்ததே.

### மாமனிதர் அரசுடன்...

உதாரணத்துக்கு நாடகத்தின் வகைகள் பற்றிய அறிவு ஒரு நாடகவியலாளனுக்கு முக்கியமானது. வெறும் திறன்கள் மட்டும் நாடக வெற்றிக்குத் துணை புரியாது. வரலாற்று, புராண இதிகாச, இலக்கிய நாடகங்கள் முதல் சமூக சீர்திருத்த, இயற்பண்பு, யதார்த்த வகை, குறியீட்டு மோடியுற்ற நாடகங்கள் வரை பல வகைகள் உண்டு. இவற்றை விட இசை நாடகங்கள், கூத்துக்களும் உண்டு. இவற்றின் தனித்தன்மைகளை ஆய்வு பூர்வமாக அணுகுவதோடு ஒப்பனை, காட்சியமைப்புக் கொள்கைகள், நெறியாள்கைத் தத்துவங்கள், பல்வேறு நடிப்பு முறைகள், ஒலி ஒளி அமைப்பு முறைகள் ஆகியவற்றைக் கற்று அறிந்து நாடகம் தயாரிப்பது நாடகக் கலைக்கு வளம் கூட்டும். அத்தோடு நாடகத்துக்கு உறுதுணையான சிற்பம், சங்கீதம், நடனம், ஓவியம் ஆகிய கலைகளின் பரிச்சயமும் அவசியமானது.

கே: தங்களது நாடகம் தவிர்ந்த பிற கலை, தொழில் ஈடுபாடுகள்...

ப: சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆறாம் வகுப்புப் படிக்கும் போது தந்தையார் காலமானார். குடும்ப வறுமை காரணமாக தந்தையார் பார்த்த பரம்பரை வைத்தியத் தொழிலைப் பழக்கினர் வீட்டார். ஆனால் எனது நாட்டமோ வேறு விதமாய் அமைந்தது. வண்ணார்பண்ணைச் சிற்பி சீனிவாச ஸ்தபதி தொடர்பு காரணமாகத் தென்னிலங்கை சென்று 3 மாத காலம் மதுரை மீனாட்சியம்மன் கோயிற் சிற்பங்களை ஆராய்ந்தேன். தொடர்ந்து விருதுநகர் வெயிலுகந்த அம்மன் கோயிற் திருப்பணியில் சிற்பப் பயிற்சி பெற்றேன். 2ஆம் உலகப் போர்க்காலம். இதனால் இராணுவ சேவையில் 4 வருடம் இருந்தேன்.

### மீளக்குடியமர்வு...

2000 ரூபாவும், சுயதொழில் ஊக்குவிப்புப் பணமாக 4000 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 02

### வடபகுதி...

போதுமானால் விசேட பரீட்சையை வடபகுதியில் நடாத்த காலதாமதமாகலாம் என யாழ் கல்விப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை தடைப்பட்ட பாடங்கள் குறுகிய கால அறிவிப்பில் மீண்டும் நடாத்தப்படும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. 02

### யாழ், கிளிநொச்சி...

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கரைச்சி உதவி அரசாங்க அதிபர்பிரிவு தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்குச் சட்டம் உடனடியாக நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆறாம் ஆண்டு...

இதேவேளை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே இலக்கணத்தைப் படிபடியாகக் கற்றுக்கொள்ளத்தக்க வகையில் தமிழ்மொழி நூல்கள் ஆக்கப்படவுள்ளன. இந்த நூல்கள் முழுக்கமுழுக்கத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியே எழுதப்பட்டுள்ளன.

சிங்களவர்கள், முஸ்லிம்களது கதைகள், சொற்களும் பிறமொழிச் சொற்களும் நீக்கப்பட்டு சுத்தத் தமிழில் தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் கலாசாரங்கள் மிளிரும் வகையில் இந்தத்தமிழ் மொழி நூல்கள் உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 18

## தீவகத்தில் ஷெல் தாக்குதல்

ஊர்காவற்றுறை, காரைநகர் போன்ற இடங்களிலிருந்து இராணுவத்தினர் குடிமனைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நேற்றுமுன்தினமும் நேற்றும் நடாத்தினர் என தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 15.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.